2 மாலைமலர் மதுரை 19-8-2007

நாளை தொடக்கம்

# சாப்-பி 1 பயிற்சி அறிமுகம்

மதுரை, ஆக. 19-

இந்தியாவில் முதல் முறையாக சாப்-பி 1 மென் பொருள் பயிற்சியை சாப் இந்தியா நிறுவனமும் ஆல்டியா இன்போடெக் நிறுவனமும் இணைந்து மதுரையில் அறிமுகம் செய்கிறது. ஈ.ஆர்.பி. எனப்படும் எண்டர்பிரைஸ் ரிசோர்ஸ் பிளானிங் வகை மென்பொருள் சேவையில் உலகின் தலைசிறந்த நிறுவனமாக விளங்கும் ஜெர்மனியை சேர்ந்த சாப் நிறுவனம் இந்த நிறுவனம் வடிவமைத்துள்ள புதிய மென்பொருள் வடிவமைப்புக்காக சாப் பயிற்சி மையம் நாளை (திங்கட்கிழமை) மதுரை ராஜா முத்தையை மன்றத்தில் தொடக்க விழா நடக்கிறது. தொழிலதிபர் கருமுத்து கண்ணன் தலைமை தாங்குகிறார். தமிழ் இசை சங்க காப்பாளர் சேக்கப்பன் சாப் இந்தியா நிறுவனத்தின் பயிற்சி பிரிவு மேலாளர் சஞ்சய் வஸ்வாணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள்.

மேற்கண்ட தகவலை பயிற்சி பிரிவு தலைவர் சந்துரு முத்து தெரிவித்தார். பேட்டியின் போது சவுந்தர்ராஜன், சுப்பிரமணியம் ஆகியோர் உடன் இருந்தார்.